# வடக்கு கிழக்கு பகுதியில் கடந்த இருபது தினத்தில் 214 தமிழர் படுகொலை; 80 பேரைக் காணவில்லை!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 22-7-86 செவ்வாய் (ஆடி 6 துல்க 14) முழக்கம் 168

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கடந்த இருபது நாட்களிலும் இருநூற்றுப்பதிஞன்கு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் இத்தகவலை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி, நேற்று கழகத்துக்கு விஜயம் செய்த இந்திய தூதரக அரசியல் பிரிவின் முதலாவது செயலாளர் ஹார்ட்டிப் பூரியிடம் தெரிவித்தார். ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த திரு. பூரி, அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துக்கு விஜயம் செய்து, இவர்களின் பணிகள் பற்றி அறிந்து கொண்டார். இம் மாதத்தில் முதல் இருபது நாட்களிலும் திருமலையில் 78 பேரும், மட்டக்களப்பில் 24 பேரும், அம்பாறையில் 8 பேரும், யாழ்ப்பாணத்தில் 16 பேரும், மன்னாரில் 48 பேரும், கிளிநொச்சியில் 6 பேரும், வவுனியாவில் 23 பேரும், முல்லைத்திவில் 11 பேரும், நெடுங்கேணியில் 18 பேருமாக மொத்தம் 214 தமிழர்கள் கொல்லப்பட்டது இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இதனைத் தவிர வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த இருபது தினங்களிலும் மொத்தம் 80 பேர் காணமல் போயிருப்பது பற்றியும் கழகத்துக்கு தகவல் கிடைத்துள்ளது. இதில் 37 பேர் திருமலை மாவட்டத்தில் காணமல் போயிருப்பதாக பேராசிரியர் சிவத்தம்பி திரு. பூரியிடம் எடுத்துக்கூறினர்.

### ★ பேச்சுக்களில் எதிர்பார்த்த முன்னேற்றமில்லை

# கூட்டணிகுழு வெள்ளிக்கு முன் தமிழகம் திரும்புவதென முடிவு

## விடுதலை இயக்கங்களுடன் பேசிய பின்னரே இறுதியான முடிவு என்று 'அமிர்' அறிவிப்பு

கடந்த பத்து நாட்களாக கொழும்பில் தங்கியிருந்து ஜனதிபதி ஜெயவர்த்தனவுடனும், மற்றும் அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்திய கூட்டணிக் குழுவினர் வியாழக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை தமிழ் நாடு திரும்புவார்கள் என்று தெரியவந்துள்ளது. விடுதலை இயக்கங்கள், மற்றும் அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவே இவர்கள் திரும்புவதாக தெரியவந்துள்ளது.

இதுவரை இங்கு இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் குறிப்பிடக் கூடிய எந்த முன்னேற்றத்தையும் அளிப்பதாக இலலை என்று கூட்டணிக் குழுவின் முககிய பிரமுகர் ஒருவர் ஈழமுரசுக்குத் தெரிவித்தார்.

''சாண்ஏற முழம் சறுக்கும்'' நிலைதான் என்று மற்றொரு கூட்டணிப் பிரதிநிதி தற்போதைய நிலைப்பாட்டை விபரித்தார்.

''பத்து நாட்களில் ஏழுதடவைகள் 'சீரியஸாக' பேச்சுவார்த்தை நடத்தி முடித்துவிட்டோம். ஆனல் 'திருப்திதரும் முடிவு எதுவுமில்லை'' எனவும் அவர் குறிபபிட்டார்.

இங்கு இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் முழு விபரங்களும் டில்லி அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்படுமென்று தெரிவித்த திரு. அமிர்தலிங்கம், விடுதலை இயக்கங்களுடன் சென்னையில் பேச்சுவார்தழ்தை நடத்தப்பட்டு அவர்களின் சம்மதத்துடனேயே எந்த முடிவும் எடுக்கப்படுமென்றும் சொன்னர்.

## மட்டக்களப்புக்கு தெற்கே முஸ்லிம்கள் தனி மாநிலம்?

மட்டக்களப்புக்குத் தென் பகுதியில் முஸ்லிம்களுக்குத் தனியான மாநிலமொன்று அமைக்கப்பட வேண்டுமென்று கிழக்கிலங்கை முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவொன்று கூட்டணிக் குழுவினரை நேரில் சந்தித்து வேண்டியுள்ளது.

இதுபற்றி தொடர்ந்து ஆராயப்பட்டு வருவதாக கூட்டணித் தலைவர்கள் யு. என். ஐக்குத் தெரிவித்தனர்.

அதேவேளை ஜனதிபதியும், கூட்டணிக் குழுவினரும் நேற்றும் சுமார் தொண்நூறு நிமி

—6ம் பக்கம் பார்க்க

## ஊழியர் வேலைக்குத் திரும்ப தொலைபேசியும் சரி வந்தது

பண்ணை தொலைத் தொடர்பு திணைக்கள ஊழியர்கள் நேற்று மீண்டும் தமது கடமைகளுக்காக பண்ணை அலுவலகத்திறகு சென்றுர்கள். இதனையடுத்து கடந்த சில நாடகளாக முற்ருக ஸ்தம்பித்திருந்த உள்ளூர், வெளியூர் தொலைபேசிச் சேவைகள் நேற்று நண்பகலுடன் மீண்டும் உயிர்பெற்றன.

பண்ணை பொலிஸ் விடுதியில் இராணுவம் குடிகொண்டது முதல் பண்ணை அலுவலகத்திற்கு கடமைக்கு செலவதறகு தொலைத் தொடர்பு திணைக்கள

—6 ஆம் பக்கம் பார்க்க

## தொண்டமாஞறு ராணுவ அடுத்த முயற்சியும் தோல்வி

(வட்வெட்டித்துறை)

கடந்த வாரம் தொண்டமாஞறு இராணு முகாமிலுள்ள இராணுவத்தினர் அதிகாரிகள் இங்கு தகர்க்கப்பட்ட பிரதான பாலத்தைச் செப்பனிடுவதற்கான முயற்சிகளுக்கு ஆயத்தஞ் செய்ய முற்பட்டபோது தமிழீழ விடுதலைப் புலிகளின திடீர் தாக்குதலால் ஒரு இராணுவ அதிகாரி உட்பட மூன்று இராணுவத்தினர் பலியானதைத் தொடர்ந்து அம் முயறசிகை விடப்பட்டது.

அதில் தோல்வி கண்ட தொண்டமாஞறு முகாம் இராணுவத்தினர், செல்வச்சந்நிதி கோவிலின் பின்புறமாக அமைந்துள்ள நீர்பாசன அணைக்கட்டுப் பாலத்தின் அருகே, செல்வச் சந்நிதியானின் திருவிழாக் கால நேரத்தில் அடியார்களின் வசதிக்காக ஆற்றின் குறுக்கே போடப் பட்டிருந்த நடைபாதைப் பாலத்தைச் சீர் செய்ய முற்படுவதாகத் தெரிவதை அறிந்து கொண்ட தமிழீழ

—6ம் பக்கம் பார்க்க

## சூடுபட்ட மீனவர் கணபதி பூரியுடன் கொழும்பு பயணம்

இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகி யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தமிழக மீனவரான திரு. வி. கணபதி கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் அரசியற் பிரிவின் முதலாவது செயலாளர் திரு. ஹார்டிப் பூரியுடன் நேற்று கொழும்பு பயணமானர்.

நேற்றுக் காலை விமான மூலம் பலாலி வந்தடைந்த திரு. பூரி பின்னர் அங்கிருந்து ஹெலிகப்டர் மூலமாக யாழ்.

—6ஆம் பக்கம் பார்க்க

## கூட்டுத்தளபதி, கல்விமந்திரி நேற்று வவுனியா விஜயம்

கல்வி, இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்தார். அவருடன் கூட்டுத்தளபதி சிறில் ரணதுங்கா, அமைச்சரின் செயலாளர்கள் ஆகியோரும் வந்தனர்.

வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் அமைச்சரின் தலைமையில் வடபகுதி கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்த கூட்டம் இடம் பெற்றது. இதில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள க. பொ. த. (உயர்தர) பரீட்சை சம்பந்தமாக ஆராயப்பட்டது. வவுனியா, முல்லைத்தீவு, மன்னர், கிளிநொச்சி பகுதிகளில் இப்

—6ஆம் பக்கம் பார்க்க

## யாழ்நகர் நேற்றுவந்த இந்திய தூதரகசெயலர் பூரிக்கு ஏற்பட்ட புது அனுபவம்

(விசேட நிருபர்)

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக செயலாளர் திரு. பூரி நேற்று யாழ்ப்பாணத்துககு மேற்கொண்ட விஜயம் ஒருதிகில் நாடகமாக இடம் பெற்றுள்ளது இதனல் திரு. பூரியின் யாழ்ப்பாண வருகை பல மணித்தியாலங்களால் தடைப்பட்டது மட்டுமன்றி, யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து ஆஸ்பத்திரிக்கு அவர் நடந்தே செல்ல வேண்டியும் ஏற்பட்டது.

நேற்றுக்காலை விமானம் மூலம் பலாலிக்கு திரு. பூரி வருவதாக இருந்தது. அவரை அழைத்து வர இந்திய தூதரக நலன் கவனிக்கும் சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியமும், செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். ரி. பாலசிங்கமும் பலாலி விமான நிலையம் சென்றிருந்தனர்.

விமானம் வரத் தாமதமாகும் என்று கூறி அவர்கள் இருவரும் அங்கிருந்து திருபபி அனுப்பப்பட்டனர். ஆனலும் சிலமணிநேரத்தில்பலாலி வந்த திரு. பூரி அங்கிருந்து ஹெலிக்கப்டர் மூலம் யாழ். கோட்டை வந்து, பொலிஸ் நிலையத்திலிருந்து ஆஸ்பத்திரி செல்ல விரும்பினர்.

சுமார் ஒரு மணி நேரமாக ஆஸ்பத்திரியுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று தமக்குத்தெரிவிக்கப்பட்டதாக திரு. பூரி பின்னர் தெரிவித்தார்.

இதனல் விரக்தியடைந்த திரு. பூரி எவரது உதவியுமின்றி தாமே நடந்து வந்து ஆஸ்பத்திரியை அடைந்தார்.

''யாழ்ப்பாணப் பகுதியில் உண்மையாக என்ன நடை

—6ஆம் பக்கம் பார்க்க

## ருக்கிங்

ருக்கிங் என்ற பெயரில் இடம்பெறும் வன்முறை அட்டகாசங்கள் சம்பந்தமாகவும், இதன் போர்வையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஆதாரபூர்வமான சிலமோசமான சமபவங்களை மேலும் தொடரவிடாமல் தடுக்கவும் விடுதலைப் புலி

—6ஆம் பக்கம் பார்க்க

## மன்னரில் ஷெல் தாக்குதல் கட்டடங்கள் பல சேதம்

(மன்னர்)

மன்னர் — கோட்டை முகாமில் இருந்து நேற்றுக் காலை ஷெல் மற்றும் ஆட்டிலரி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதால் நகரில் பலஇடங்களில் இவை விழுந்து வெடித்தன.

இச் சம்பவத்தால் சில வீடுகளும், கட்டடங்களும் சேதமடைந்தன: உயிர்ச் சேதங்கள் பற்றிய விபரங்கள் தெரி

—6ஆம் பக்கம் பார்க்க

## சிவத்தம்பி பதவி ஏற்றர்

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவராக

—6ஆம் பக்கம் பார்க்க

## வரி விளம்பரம்

### திட்டப்பரிசு

இம் மாதத்துக்குரிய அதிஷ்டசாலியை அங்கத்துவ நண்பர்கள் இம்மாதம் 25ந் திகதி மாலை 5மணியளவில் வந்து தெரியுங்கள். நிலுவைகள் இருப்பின் நேரில் வந்து ஆவன செய்யுங்கள். தவறினுல் வெற்றி பெற்றுலும் கட்டிய தொகை மட்டுமே தரப்பெறும். சேராதவர்கள் சேரலாம். மேலும் விபரங்களுக்கு லக்கி பெனிபிட் கோ லிமிட்டட், பொதுச்சந்தை, கோப்பாய்.

—R/24080

பட்டமளிப்பு விழாவில் உரை:

# காந்தி காட்டிய பாதையில் நேசையா பணி புரிகின்ருர்

(வேலணை)

"கிராமங்களின் வளர்ச்சி அந்த கிராமங்களின் மூல வளங்களைக் கொண்டே முன்னேற்ற வேண்டும். கிராமப்புறத்தில் உள்ள மக்கள் நகரப் புறத்திற்கு வந்தாலும் அவர்களது எதிர்பார்ப்புக்கள் சரியான வகையில் கிடைக்காது போகலாம். எனவே கிராமத்தின் மூலவளங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னேற்ற வேண்டும்."

மேற்கண்டவாறு தெரிவித்தவர் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. பால சுபபிரமணியம் அவர்கள். அறவழிப் போராட்டக் குழுவைச் சேர்ந்தவரும் பேராசிரியருமாகிய திரு. கு. நேசையா அவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பேராசிரியர் கு. நேசையாவுக்கு "அறநெறிக் காவலர்" என்னும் பட்டத்தை கலாநிதி வித்தியானந்தன் வழங்கினுர்.

விரிவுரையாளர் திரு. பால சுப்பிரமணியம் தொடர்ந்து உரையாற்றுகையில் மகாத்மா காந்தியடிகள் அக் காலத்தில் கிராமங்களின் மூல வளத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார். அவரது அக் கால சிந்தனை தற்போதைய நிலையில் பொருந்தக் கூடியதாக இல்லாவிட்டாலும் அக் கால கட்டத்தில் அவர் கிராம மூல வளங்களைக் கொண்டே பொருட்களைத் தயாரிப்பதில் மக்களை ஊக்கப்படுத்தியிருந்தார். இது பெருமைக்குரியது. திரு. நேசையா அவர்களும் காந்தீயவாதியாக நடந்து அவரின் சிந்தனைகளைக் கடைப்பிடித்து கிராம சமுதாயத்திற்கு உதவுவது பாராட்டிற்குரியது. அவருக்கு இவ் விழா எடுப்பது மிகப் பொருத்தமானது ஆகும் என்ருர்.

இவ் விழாவில்;- பண்டிதர் சிவலிங்கம், யாழ். மாநகர ஆணையாளர் திரு சி. வீ கே. சிவஞானம், அருட்திரு சர்வானந்தா அடிகளார், மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா ஜே. பி. கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம், விரிவுரையாளர் திருமதி சதாசிவம், பேராசிரியர் சிவஞானசுந்தரம்(நந்தி) உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர்.

அறவழிப் போராட்டக் குழுவினுல் நடாத்தப்படும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட சிறுவர் பாடசாலை மாணவர், மாணவிகளது நடன, நாடக, பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை பேராசிரியர் சு. வித்தியானந்தன் வழங்கினுர்.

## வெளிக்கள உத்தியோகத்தர்கள்

எமது நிறுவனத்தில் வெளிக்கள உத்தியோகத்தர்களாகப் பணியாற்றுவதற்கு அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பிணைப்பணமாக ரூபா 10,000 (ரூபா பத்தாயிரம்) கட்டக் கூடியவர்களாக இருக்க வேண்டும். பிணைப் பணத்திற்கு 12% வட்டி வழங்கப்படும். சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொது முகாமையாளர்,
சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ்.
140, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


ஈழமுரசு: செய்திக்கதிர்: அமிர்தகங்கை வெளியீட்டாளர்கள்.

## 2-வது நினைவஞ்சலி

### து. பஞ்சலிங்கம்

(மனேமாஸ்டர்)

தோற்றம்: 09-04-1956 அழிப்பு: 22-07-1984



ஓ... எம் இனிய மனிதா!

அதிகார பாசிபடர்ந்த சகதிக்குள் உனைத் தொலைத்து விட்டு எங்கேயென்று தேடுவோம். உன்னை- தூரத்தில் சின்னப்புள்ளியாய் பொன்னொளி வீசும் அந்த எதிர் காலத்தை நாம் நெருங்க - இன்னும் நீண்ட காலங்கள் தேவைப்படும். அந்த நீண்ட வரலாற்று ஓட்டத்தில் உன் போன்ருேர் இழப்பு-இல்லை உன் போன்ருேரின் அழிப்பு- நமக்கு மீண்டும் மீண்டும் ஒரு கறைபடிந்த பாடம். அது நம்மைச் சற்று நிதானிக்க வைத்துள்ளது. நமது பாதையில் அவர்களை இனங்காட்ட நமக்கு வெளிச்சமிட்டு காட்டும் ஒரு ஒளி உமிழும் விளக்கு உன் மரணம் —அந்த மரணம் இந்தவகையில் மதிப்பிடமுடியாத ஒரு படிப்பினை. அது மலையைவிடவலிமையானது. பாருங்கல்லைவிட கடினமானது.

கொம்மாந்தறை,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தவர், ஊர் மக்கள்,
உறவினர், நண்பர்கள்.

R/24079

## வலியுறுத்து

(சங்கானை)

ஐந்தாம் வகுப்புக்கு உட்பட்ட கிராமியப் பாடசாலைகள் பல காலை எட்டுமணிக்கு ஆரம்பமாகிப் பிற்பகல் இரண்டு மணிக்கு மூடப்படும் நிலை மாறி ஒரு மணிக்கு மூடப்பட வேண்டும் என வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர் திரு. என். வேலுப்பிள்ளையிடம் பல பெற்ருேர்கள் கோரிக்கை முன் வைத்து வலியுறுத்தியுள்ளனர்.

பல ஏழை மாணவர்கள் காலையில் சாப்பிடாமல் பாடசாலைக்கு சென்று தொடர்ந்து ஆறு மணித்தியாலம் படிக்க முடியாது என்றும், விரதம் கூட சில சிறுவர்கள் அனுட்டிப்பதனுல் பல கஷ்டங்கள் இருப்பதாகவும், மேலும், முன்னைய காலங்களில் அரசு இலவசமாக வழங்கிய 'பிஸ்கட்' உதவியும் தற்பொழுது இல்லாமையும் பல கஷ்டங்களை தோற்றுவித்துள்ளதாகவும் பலரும் கருத்தும், கவலையும் தெரிவிக்கிருர்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக சில சிறுமிகள் மயங்கி விழுந்த சம்பவங்கள் பல பெற்ருேர்களை வேதனையுறச் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

## பிறந்தநாள் வாழ்த்து

✱ திருநெல்வேலி, குலசேகரம் சகுந்தலா தம்பதியின் மகள் தட்ஷாயினி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

✱ நாவற்குழி, பரமேஸ்வரன் மனேன்மணி தம்பதியின் மகன் ரமேஷ்குமார் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

✱ புங்குடுதீவு, யோகராஜா மல்லிகாதேவி தம்பதியின் மகள் இந்துஜா இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

✱ அரியாலை, இந்திரகுமார் தவஜோதி தம்பதியின் மகன் பிரஷாத் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

✱ கல்வியங்காடு, இராசரத்தினம் பூபதி தம்பதியின் மகன் கேதீஸ்வரன் இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

✱ பாஷையூர், எஸ்கலின் வசந்தா தம்பதியின் மகன் இதயரூபன் இன்று தனது மூன்ருவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

✱ மூளாய், ஆனந்தமூர்த்தி அருள்ஞானசுந்தரி தம்பதியின் மகன் தயாளன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர்.

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா

★ டென்மார்க்

★ சவூதி அரேபியா

(அ) கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உங்களை எதுவித இடையூறுகளுமின்றி நேரடியாக அழைத்துச் செல்வார்.

(ஆ) சவூதி அரேபியாவுக்கு (தொழிலாளர்-Labourers) செல்ல விரும்புவோருக்கு 22ம், 23ம், 24ம் திகதிகளில் பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்ருேம்.

(இ) கனடா, டென்மார்க், சவூதி ஆகிய நாடுகளுக்கு பாஸ்போட்,முற்பணம் கொடுத்தவர்கள் 21, 22ம் திகதிகளில் காரியாலயத்தில் சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்பு;

**N. BALA**

பஸ் வழி இல:
764, பலாலி வீதி,
கோண்டாவில்.

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

R/24077

## வெளிநாட்டு பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியாவிற்கு உடனடியாக தொழிலாளர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் எதுவித இடையூறுமின்றி நேரடியாக உடன் அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவிற்கு ஆஸ்பத்திரி கிளினர், ஏர்ப்போட் கிளினர், ஹோட்டல் கிளினர். போக விரும்புவோர் 26ஆம் திகதிக்கு முன்பாக பாஸ்போர்ட் ஆறு புகைப் படங்களுடன் தொடர்பு கொள்ளவும். மற்றும் பாஸ்போர்ட், பொண்ட் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

இ. தேவராஜா,
அச்சுவேலி தெற்கு.
(அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு அருகாமை)

R/24073

# 'இன்னல்' எதுநேரினும் கல்வி சீர்குலையவே கூடாது'

(புலோலி)

"எந்தவிதமான கஷ்டநிலை தோன்றினாலும் மாணவர்களின் கல்வி சீர்குலைய அனுமதியளிக்கக்கூடாது. மாணவர்களின் கல்வியறிவை மேம்படுத்தி அவர்களை எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாகத் திகழச் செய்வதற்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இணைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பாடசாலைகளில் பொருட்காட்சிகளை நடத்துவதன் மூலம் மாணவர்களின் செயல்முறைக் கல்விக்கு வழிவகுத்து அவர்களின் பூரண அறிவு வளர்ச்சிக்கு வித்திட முடியும்."

இவ்வாறு யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வியதிகாரி திரு. கே. கந்தசாமி இடைக்காடு மகாவித்தியாலய பொருட்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். வைபவத்திற்கு வித்தியாலய அதிபர் திரு. பொ. பூபாலசிங்கம் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய யாழ். பிரதம கல்வியதிகாரி "பாடசாலையில் ஆசிரியர் கற்பித்தல், மாணவர் கற்றல் முறைகளைச் சிறப்பாக வெளிப்படுத்துவது பொருட்காட்சிகளாகும். மாணவர்கள் சிந்தனையாளர்களாகவும், செயலாற்றலுள்ளவர்களாகவும் வாழ்வதற்கும், மாணவர்கள் மத்தியில் தொழில் மகத்துவத்தை உணரச் செய்வதற்கும் கல்விப் பொருட்காட்சிகள் வழிவகுக்கின்றன" என்றார்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஏ. வி. தங்கராசா உரையாற்றுகையில் இடைக்காடு மகாவித்தியாலயம் கிராமப்புறத்தில் அமைந்திருந்தாலும் கல்வித் தரத்தால் உயர்ந்த சிறந்த பாடசாலையாகத் திகழ்வது பாராட்டப்படவேண்டியதாகும். அதிபரின் சேவை மனப்பான்மையும் ஆசிரியர்கள் பெற்றோர்கள், பழைய மாணவர்களினது ஒத்துழைப்புமே இதற்குக் காரணமாகும். திரு. வே. நமசிவாயம் போன்றோரின் உதவிகள் இவ் வித்தியாலயத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கெடுக்கின்றன" என்றார்.

வித்தியாலய அதிபர் திரு. பொ. பூபாலசிங்கம் தலைமையுரையில். "இன்றைய பதற்றமான நிலையிலும் வித்தியாலய ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களின் ஒத்துழைப்பினாலேயே மாணவர்களுக்கு மிக இன்றியமையாததான இக் கல்விப் பொருட்காட்சியை நடாத்தக் கூடியதாக இருந்தது. எமது பகுதிகளின் வளத்தைப் பேணக்கூடிய வகையிலேயே இப் பொருட்காட்சி ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது" என்றார்.

## கல்வி அதிகாரி கூறுகிறார்

# இன்றைய நெருக்கடியினால் நாம் சோர்வடையக் கூடாது

(நீர்வேலி)

"நாட்டின் நிலைமை எமது சமுதாயத்தில் மாபெரும் மனத் தாங்கல்களை உண்டு பண்ணினாலும் இவை எல்லாம் ஒரு மனிதன் வாழ்வில் துச்சம் என மதித்து சமுதாயம் புத்துணர்வு பெற உழைக்க வேண்டும். இக்காலகட்டத்தில் மாணவர்களையும் அவர்களது ஆற்றல்களையும் நல்வழிப்படுத்த கண்காட்சிகள் பெரிதும் உதவுகின்றன. மாணவர்களிற்கு கல்வியை மாத்திரம் புகட்டும் ஒரு பாடசாலையாக இருக்காது அவர்களது எதிர்கால வாழ்விற்கு வேண்டிய ஆக்கங்கள், வெளியுலக அறிவு தெரிந்து அறிதல், ஆராய்வு என்பனவற்றிற்கும் அவர்களைத் தயார் படுத்த உதவ வேண்டும்."

இவ்வாறு நீர்வேலி கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலயத்தில் இடம் பெற்ற கல்விக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராஜா குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. கு. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து பேசிய திரு ஆ. வ. தங்கராஜா "எனது சேவைக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை மிகவும் குறுகிய கால வளர்ச்சியில் பல அரிய பெரிய சாதனைகளை நிலை நாட்டியுள்ளது. இப் பாடசாலையின்வளர்ச்சி கண்ட கல்வித் திணைக்களம் அடுத்த வருடம் 7ம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது" என்றும் கூறினார்.

அடுத்து திருவாளர்கள் வி. சின்னத்தம்பி, ம. க. நடராஜா, மனோகரன் நேரு, திரு. சொக்கநாதன், திருமதிகள் பூ.கந்தசாமி, க. பொன்னையா ஆகியோரும் உரையாற்றினர்.

# கஷ்டப்படும் மக்கள் மத்தியில்தான் கலைகள் வளர்க்கப்படுகின்றன

(அரியாலை)

'ஓவியத்தின் மறுபெயர் சித்திரம். சித்திரம் என்றால் சித்தரிக்கப்படுவதாகும். எண்ணக் கிடக்கைகளைப் பிரதிபலிப்பதின் மறு பெயர்தான் சித்திரம் ஆகும். ஆதிமனிதனின் முதல் மொழியாக இருந்த ஓவியம் இன்று உலகப் பொது மொழியாக இருக்கிறது. வெளிநாடு செல்லும் ஒருவருக்கு வரை படம் பல்வேறு வகையில் உதவுகிறது. அந்த வரைபடமும் அழகுக் கலையான ஓவியத்தைச் சார்ந்ததேயாகும். எண்ணக் கருத்துக்களை வர்ணங்கள் மூலம் வெளிப்படுத்த ஓவியம் உதவுகிறது.'

இவ்வாறு ஓவியக் கலைஞர் திரு.எஸ். சுந்தரலிங்கம் (ஈழத்தீபன்) 'ஓவியங்கள்' என்னும் பொருள்பற்றி அரியாலை சரஸ்வதி அம்பாள் ஆலய மண்டபத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அரியாலை அறிவொளிக் கலை, இலக்கியக் கழகம் ஒழுங்கு செய்திருந்த இக் கூட்டம் திரு. இ. அரசகேசரி தலைமையில் நடைபெற்றது. அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

'கலைகள் கஷ்டப்பட்ட மக்கள் மத்தியிலேயே இருக்கிறது. அவர்கள் மத்தியிலேயே அது வளர்ந்து வருகிறது. வள்ளுவர், பாரதி கஷ்ட சூழ் நிலையில் வாழ்ந்த படியால்தான் இத்தனை கவிதைகளும் எமக்குக் கிடைத்தன. பாராட்டை விரும்புபவர்கள் கலைஞர்கள். அது அவர்களுக்குப் பணத்திற்குச் சமமாக இருக்கிறது. எழுதுவது கூட ஓவியத்துறைப் பாற்பட்டதேயாகும். ஓவியம் கையால் மட்டும்தான் கீற வேண்டுமென்ற அவசியம் இல்லை. காலால், வாயால் கூட கீறலாம். இன்று அவ்விதம் கீறியும் வருகிறார்கள். கலை, நாகரிகம் பிறந்தது இந்தியாவில்தான். அதற்காக அவர்கள் சொல்வதை எல்லாம்சரியென ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் அவர் சொன்னார்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் சி. சிவதாசன், ந. இராமநாதன், செல்வர்கள் த. குமரேஸ்வரன், இ. மதிகரன் ஆகியோரும் உரையாற்றினர்கள். திரு. ஐ. வரதராசா நன்றியுரை ஆற்றினர்.

## நூல் வெளியீட்டில் துணைவேந்தர் பேச்சு:

# பேச்சுவழக்கை நாடகத்தில் புகுத்தியவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களே

(அரியாலை)

1935–1939 வரையிலான காலத்தில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் நான்கு நாடகங்களைப் பேச்சுத் தமிழில் எழுதினார்கள். பேச்சு வழக்கை நாடகத்தில் புகுத்திய பெருமை அவருக்குண்டு. எந்த இலக்கியத் துறையானாலும் பேச்சு வழக்கு மிக முக்கியமானதாகும். திரு. வன்னியகுலம் அவர்கள் பெரும்பாலும் முற்போக்கு இலக்கியத்தில் இருந்துதான் இந்நூலில் தரவுகளைத் தந்துள்ளார். மொழி, மாற்றம் அடைவதுபோல, இலக்கணமும் மாற வேண்டும். ஒரு காலத்தில் கையாளப்பட்ட சொற்கள் வேறு காலத்தில் மாற்றம் அடைவது தவிர்க்க முடியாததாகும்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் திரு. சி. வன்னியகுலத்தின் "ஈழத்துப் புனைகதைகளிற் பேச்சு வழக்கு, என்னும் நூல் வெளியீட்டு விழாவில் வாழ்த்துரை வழங்கும் போது குறிப்பிட்டார். இவ் விழா நல்லை ஆதீனத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

திருவாளர்கள் சி. தியாகராசா, ம. சிவராசா ஆகியோர் மங்கல விளக்கேற்றினார்கள். திரு. பி. நடராசன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது; திரு. வன்னியகுலம் அவர்கள் முதுகலைமாணிப் பட்டத்திற்காக இந்நூலை எழுதிய போதும், இதில் உள்ள நுணுக்கமான விடயங்கள் சாதாரண வாசகர்களும் விரும்பிப் படிக்கக்கூடியதாக இருக்கிறது. மொழியையும், இனத்தையும், மொழியையும் சமயத்தையும் இணைக்கின்ற ஆய்வாக இந்நூல்இருக்கிறது. மொழியும், சமூகமும் பின்னிப் பிணைந்ததாக உள்ளது. இலக்கணகாரர்கள் மொழியினைச் சிறப்பு முறையில் உபயோகிக்கிறார்கள். மொழியியல்என்பதுவிஞ்ஞான முறையிலான ஆய்வாகும். இலக்கியத்தில் உள்ள மொழியை ஆய்வதும் ஓர் இலக்கிய விமர்சனமாகும். மொழி உணர்வுடையது. மனிதனைச் சிந்திக்க வைக்கு மொழி உதவுகிறது" என்றார்.

திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) வெளியீட்டுரையில் குறிப்பிட்டதாவது:

திரு. வன்னியகுலம் அவர்கள் ஆரம்பத்தில் படைப்பினராக, சிறுகதை எழுத்தாளராக இருந்து இன்று ஆய்வாளராக இருக்கிறார். கடந்தகால இன்றைய நிகழ்வுகளை அறியக் கூடியதாக இந்நூல் உள்ளது. எதிர்கால வெளியீடுகள் செல்லக்கூடிய வழியையும் இது கூறுகிறது. இந்நூலில் இருந்து தரப்படும் தரவுகளில் இருந்து மேலும் ஆராய்ச்சி செய்யக் கூடியதாக இருக்கிறது. இந்நூலை எழுத்தாளர்கள் கட்டாயம் படிக்கவேண்டும் என ஆலோசனை கூறுகிறேன்" என்றார்.

கலாநிதி திருமதி பார்வதி கந்தசாமி ஆய்வுரையில் "இந்நூலில் உள்ள பெரிய விடயங்களை இரு ஆண்டுகளில் நூலாசிரியர் தொகுத்துத் தந்துள்ளார். இலக்கணம் என்றால் சாதாரண மக்கள் எழுத்து மொழியைத்தான் கருதுவார்கள். அண்மைக் காலத்தில் இருந்துதான் புனைகதைகளில் பேச்சு வழக்கைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். நாட்டார் இலக்கியங்களும் பேச்சு வழக்கையே ஆதாரமாகக்கொண்டதென்று வாதிட்டார்கள். இந்நூலின் மூலம் வெறும் சொற்களை மட்டுமல்ல, சமூகத்தையும் ஆராய்கிறோம். மொழி நிலைத்து நிற்கும் ஒன்றல்ல. காலத்திற்குக் காலம் மாறும். மேலை நாடுகளில் வர்க்கம் வளர்ந்துள்ளது. எங்கள் நாட்டில் வர்க்கத்திலும் சாதி தலைவிரித்தாடுகிறது" என்றார்.

நூல் ஆசிரியர் திரு. வன்னியகுலம் பதில் உரையில் குறிப்பிட்டதாவது:

"எந்தக் கதா பாத்திரமும் செந்தமிழில் உரையாடுவது இல்லை காலம், களம், சமூகப் பின்னணிக்கு ஏற்ற மாதிரிக் கதாபாத்திரங்கள் உரையாட வேண்டும். பேச்சு வழக்குச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மாறுபடும். வடமராட்சியைச் சேர்ந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களே மரபுப்போராட்டத்தை ஆரம்பித்துவைத்தவராகும். பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் அதற்குக் கைகொடுத்து உதவினார். திருவாளர்கள்: கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோர் இதற்கு ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கினார்கள். முற்போக்கு இலக்கியத்தின் வளர்ச்சி, ஈழத்துப் புனைகதைகளின் வளர்ச்சியாக உள்ளது. புனைகதை என்றால் என்ன, விமர்சன இலக்கியம் என்றால் என்ன, டானியல் ஜீவாவைமறந்து படைக்க முடியாது இக் கட்டுரைகளை ஏழு ஆண்டுகளுக்கு முன்பு எழுதினேன். 1980-ல் இருந்த கருத்துக்களை இப்போது நான் மறைக்க விரும்பவில்லை" என்றார்.

திரு. சொக்கனிடம் இருந்து சிறப்புப் பிரதிகளைத் திருவாளர்கள்: ம. சிவராசா, ஏ. கே. கருணாகரன், பூ. சிறிதர்சிங் ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள். திரு. எஸ். சோமகாந்தனும் ஆய்வுரை நிகழ்த்தினார். கலாநிதி எஸ். மௌனகுரு நன்றியுரை கூறினார்.

# கிராமிய அபிவிருத்திக்கு உழைக்க நலம் அவசியம்

(புலோலி)

"கிராமிய மக்கள் சுகதேகிகளாக வாழும்போதுதான் அவர்கள் தங்கள் வாழ்வை வளம்படுத்திக் கொள்ள முடிவதுடன் கிராமிய அபிவிருத்தி மேம்பாட்டிற்கும் உழைக்க முடியும். எனவே கிராமிய மக்களை நோய்களிலிருந்து பாதுகாத்து சுகதேகிகளாக வாழ வைக்க கிராமங்களில் சுகாதார சேவைகள் சிறப்பாக நடைபெறவேண்டியதுடன் கிராமிய மக்களுக்கு சுகாதாரம் பேணல்பற்றிய விளக்கங்களும் வழங்கப்படவேண்டும். இதற்கு சுகாதார விழாக்கள் மிக இன்றியமையாததாகக் காணப்படுகின்றன."

இவ்வாறு அகில இலங்கை தேசிய சுகாதார வாரத்தையொட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற சுகாதார விழாவிலும், பரிசளிப்பு வைபவத்திலும் கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் குறிப்பிட்டார்.

விழாவிற்கு நாவலர்மடம் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத்தலைவர் திரு. வீ. கே. விஸ்வலிங்கம் தலைமை தாங்கினார். கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: "கிராமப் பகுதி மக்கள் சுகாதார வசதிகளைப்பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால் கிராமப்பகுதிமக்களுக்கு இன்று ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்கள் சிறந்த சேவைகளை வழங்கிவருகின்றன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. லலிதகுமார் உரையாற்றுகையில், கிராமப்பகுதி மக்கள் திடகாத்திரமான நற்பிரஜைகளாகத் திகழ வேண்டும். கிராமியமக்களுக்கு சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் கிராமப் பகுதி மக்களுக்கு சுகாதார ஆலோசகர்களை வழங்குவதற்கும் கிராமங்கள் தோறும் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்கள் இயங்கிவருகின்றன. இந் நிலையங்களில் தொண்டர்கள் சேவைகளையாற்றி வருகின்றனர். கிராமிய மக்கள் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களிலிருந்தும் நிலையத் தொண்டர்களிடமிருந்தும் நன்மைகளை பெற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

இவ்விழாவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் பருத்தித்துறைப் பகுதியின் சிறந்த ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையமாக பருத்தித்துறை 4ம் குறுக்குத் தெரு ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையமும், சிறந்தமுதல் உதவியாளராகச் செல்வி மஸ்ரலா பிரான்சிசும், நெல்லியடிப் பகுதியின் சிறந்த ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையமாக நாவலர் மடம் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையமும், சிறந்த முதல் உதவியாளராக செல்வி புஷ்பா கந்தையாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை உதவி வைத்திய மாணவர்களின் பயிற்சிநெறி விரிவுரையாளர் வைத்தியகலாநிதி கனக சுகுமார், உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. வீ. கே. ஈசுரபாதம், சுகாதாரப் பகுதி சுகாதாரக் கல்வியதிகாரி திரு. கே. வைத்தீஸ்வரன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. கே. குணரத்தினம் உட்பட இன்னும் பலர் விழாவிலே கலந்துகொண்டு உரையாற்றினர். போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களைப் பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திரு. வி. இராமச்சந்திரன் வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# விவசாயிகள் குழு தெரிவு

(சங்கானை)

காரைநகர் வியாவில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு தி. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் பெரும்பாக உத்தியோகத்தர் திரு.பி. சூசைப்பிள்ளை முன்னிலையில் விவசாயிகள் குழு தெரிவு நடைபெற்றது.

நிர்வாகிகள் விபரம் பின்வருமாறு: தலைவர்:— திரு' ரீ. சண்முகசுந்தரம், செயலாளர்:—திரு.ஏ. தர்மராஜா, பொருளாளர்:—திரு.தி. சேந்தராஜா. குழு உறுப்பினர்களாக ஏழு பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

உதய சிந்தனை

நுட்பமானதாய் மாட்சியுடையதாய் ஆராயவல்லதான அறிவு இல்லாதவனுடைய எழுச்சியான அழகு, மண்ணால் சிறப்பாகப் புனையப்பட்ட பாவை போன்றது.

—திருக்குறள்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

இதய ஒலி

22-7-86 செவ்வாய்க்கிழமை (அக்ஷய) ஆடி 6

# காமன்வெல்த்துக்குள் கயிறிழுப்பு நடக்கிறது

காமன்வெல்த் விளையாட்டுக்களைப் பகிஷ்கரிப்பதென்று பாரதம் நேற்றுமுன்தினமிரவு முடிவெடுத்ததைத் தொடர்ந்து பெரும் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

பிரித்தானிய முடிக்குரிய மகாராணியாரின் தலைமையில் இயங்கிவரும் காமன்வெல்த் நாடுகள், தென்னாபிரிக்க இன வெறி ஆட்சியின் காரணத்தால் இன்று இரண்டாகப் பிளவு படுள்ளமை தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாக அமைந்து விட்டது.

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சரின் மூர்க்கத்தனமான பிடிவாதமும், விட்டுக்கொடுக்காத சர்வாதிகாரப் போக்குமே இதற்கு முழுக்காரணமாகும்.

நாற்பத்தொன்பது நாடுகளைக்கொண்ட காமன்வெல்த் அமைப்பில் இந்தியாவுடன் சேர்த்து இருபத்துநான்கு நாடுகள் விளையாட்டுக்களைப் பகிஷ்கரிப்பதென்று முடிவெடுத்துள்ளன.

இது நேற்றுக் காலையில் இருந்தநிலை.

இப்பொழுது இத்தொகை மேலும் அதிகரித்திருக்கக் கூடும். மொத்தத்தில் அரைவாசி அங்கத்துவ நாடுகள் இவ் விளையாட்டுப் போட்டிகளை பகிஷ்கரிக்கின்றன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை களை கட்டவேண்டிய எடின்பரோ மைதானம், இப்போதே சோபையிழக்கத் தொடங்கியுள்ளது.

காமன்வெல்த் அமைப்பின் ஸ்தாபன நாடுகளில் ஒன்றான பாரதம் பகிஷ்கரிப்பதென்ற முடிவைத் திடீரென்று எடுக்கவில்லை.

கடந்த பதினான்காம் திகதியே தனது நிலைப்பாட்டை பாரத அரசு பிரித்தானிய அரசுக்கு அறிவித்திருந்தது.

பிரிட்டிஷ் பிரதமர் தனது முரட்டுப் பிடிவாதத்திலிருந்து இறங்க மறுத்ததால் பாரதத்தின் பகிஷ்கரிப்பு முடிவை விளையாட்டு அமைச்சர் திருமதி மார்கிரட் ஆல்வா உத்தியோக பூர்வமாக அறிவிக்க நேர்ந்தது.

இம்முடிவை எடுப்பதற்கு முன்னர் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் ஆபிரிக்க முன்னணி நாடுகளான ஸாம்பியா, ஸிம்பாப்வே ஆகியவைகளின் தலைவர்களுடன் தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு விளையாட்டு விடயமென்றாலும், பாரதம் நிதானமாக, ஆற அமர்ந்தே தனது இறுதி முடிவை எடுத்துள்ளமை இதன் மூலம் நன்கு தெரிகின்றது.

பிரிட்டனிடமிருந்து பல்வேறு வகையிலும் 'தாராள' உதவிகளைப் பெற்றுவரும் ''ஜனநாயக சோஷலிஸ குடியரசான'' இலங்கை அரசாங்கம், இவ்விவகாரத்தில் நேற்று வரை ''மதில் மேல் பூனை'' யாகவே இருந்து வந்துள்ளது என்பதையும் நாம் நினைவில் வைத்திருப்பது நல்லது.

''இதனையிட்டு ஜனாதிபதி பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்'' என்று ஒரு சிறு அறிக்கை வெளியிடப்பட்டதும் குறிப்பிடப் படவேண்டியது.

இதற்கிடையே, இவ்விடயம் தொடர்பாக இரண்டு பெண்களுக்கிடையே சிறு சண்டை ஆரம்பமாகியுள்ளதாக லண்டன் ஒப்சேவர் பத்திரிகை செய்தியொன்று வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய மகாராணியார் எலிஸபெத் அம்மையாருக்கும், பிரிட்டன் பிரதமர் திருமதி தட்சருக்குமிடையிலேயே இச் சண்டை ஆரம்பித்துள்ளது.

காமன்வெல்த் நாடுகளின் தலைவி என்ற வகையில் இவ்வமைப்பு பிளவுபடுவதை மகாராணியார் மனதார விரும்பாததே இதற்குக் காரணமாகும்.

தென்னாபிரிக்க அரசை பிரிட்டன் ஏன் கண்டிக்கக்கூடாது? பொருளாதாரத் தடைகளை ஏன் விதிக்கக்கூடாது? தட்சர் இவ்வாறு சர்வாதிகாரமாக நடக்க வேண்டுமா என்ற கேள்விகள் மகாராணியாரின் மாளிகைக்குள் எழும்பியுள்ளன.

தட்சரின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளால் காமன்வெல்த் அமைப்பு சிதறுண்டு போவதை மகாராணியார் அனுமதிக்கப் போவதில்லை என்றும் மாளிகை வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அப்படியானால் மகாராணியார் என்ன நடவடிக்கையை எடுக்கப் போகின்றார்?

தட்சரின் விளையாட்டை அனுமதித்தால் அது ஜனநாயகத்திற்கு சாவுமணியாகப் போய்விடும் என்பதை ''மாளிகை'' புரிந்துகொண்டிருப்பது மகிழ்ச்சி தருகின்றது.

★ நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி

# மலையகத்தைப் பிரித்துவைத்து ஈழத்தைப் பார்க்க முடியாது!

'இலங்கையின் பெருந்தோட்டங்களில் வசிக்கும் தமிழ் மக்களும் இத்தீவின் வடக்கிலும் கிழக்கிலும் உள்ளதமிழர்களும் தனிவேறான ஒரு தேசிய இனத்தவராவர். எமது திண்ணமான நம்பிக்கை இதுவாகும்.' இவ்வாறு தொடர்கிறார் பாலகுமார்.

எமது விடுதலைப் போராட்டம் இலங்கைத்தீவின் மத்திய மலையகத்திலிருந்து தொடங்குகிறது. இலங்கையின் ஏற்றுமதி வருவாயிற் சரிபாதி பெருந்தோட்டங்களினின்றுதான் கிடைத்து வருகிறது. பாட்டாளிவர்க்கத் தமிழரின் முதுகெலும்பு எனும்படியாகத் திகழ்பவர்கள், பெருந்தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களே. பெருந்தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள், தீவின் கிழக்கிலுள்ள ஏழை நாட்டுப்புறத்தவர்கள். தீவின் வடக்கில் வாழும் பாட்டாளி வர்க்கத்தினராகிய இவர்கள் எல்லோரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த போராட்டத் திட்டத்தின் வாயிலாக மாத்திரமே ஈழம் உருவாக முடியும் என்பது எமது அசையாத நம்பிக்கையாகும்.' இவ்வாறு அழுத்தம் திருத்தமாக கருத்து வெளியிடுகிறார் 'ஈரோஸ்' பாலகுமார்.

'ஈரோஸ்' இயக்கத்திற்கு ஓர் இராணுவ வாசனையூட்ட நாம் விரும்பவில்லை. விரும்பி இருந்தோமானால், முதன்முதற் கொண்டே நாம் அப்படிச் செய்திருக்க முடியும். அதற்குப் பதிலாக, மக்களை அரசியல் மய உணர்வூட்டும் சொந்தத் திட்டமொன்று எம்மிடம் இருந்தது. இலங்கை அரசுக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டம் ஏன் உருவாகியது? எமக்குப் பகை யார்? இந்த அரசியல் குறிக்கோள்களை எய்துதற்கு உரிய வழிவகைகளில் ஒரு சிறிய பாகமே ஆயுதங்கள். நாம் ஏன் ஆயுதம் ஏந்தவேண்டும்? இவைகளை மக்கள் அறியச் செய்வதுதான் அரசியல்மய உணர்வூட்டும் எமது திட்டம் ஆகும்.' இங்ஙனம் விளக்குகிறார் 'ஈரோஸ்' இயக்கத்தின் சங்கர். வேறு எந்தவொரு நாட்டிலிருந்தும் 'ஒரு புரட்சியை இறக்குமதி செய்வதாக' எமது சொந்தப் புரட்சித் திட்டம் அமையாது. நாம் பிறந்த மண்ணுக்குத் தோதானது அத்திட்டம்.' இவ்வாறு கொள்கை விளக்கம் அளித்த 'ஈரோஸ்' விடுதலை இயக்கத்தின் சங்கர் மேலும் பின்வருமாறு தொடர்கிறார்:

'இலங்கை அரசாங்கம் எமது தமிழ் மக்களை நசுக்கி, அடக்கியொடுக்கிவருகிறது. ஆக, அதன் பொருளாதார முதுகெலும்பை முறிப்பது 'ஈரோஸ்' ஈழம் புரட்சிகர அமைப்பின் முதற் குறிக்கோள் ஆகும். அதனைத் தொடர்ந்து, இராணுவ இலக்குகளை 'ஈரோஸ் தாக்கும்.' இவ்வாறு கூறுகிறார் சங்கர்.

சங்கரின் கூற்றுப்படிக்கு, இராணுவப் பயிற்சிகளைப் பொறுத்தமட்டில், தமிழர் விடுதலைப் போராளி இயக்கங்களுள் 'ஈரோஸ்' இயக்கமே முதன்முதலாக ஒரு வெளிநாட்டு இராணுவப் பாசறையில், 'முன்னேற்றமடைந்த விடுதலை இயக்கங்களிடம் இருந்து' பயிற்சி பெற்றதாகும்.

ஆனாலும் 1983 ஜுலை-ஒகஸ்ட்டில் இலங்கைத் தீவு அடங்கிலும் கொலைகாரத்தனமாக முடுக்கிவிடப்பட்ட தமிழர்க்கு எதிரான ''வேள்வி'' யை அடுத்து அடிப்படை நிலைமை விரைந்து மாற்றம் அடையலாயிற்று. அந்நிலைமைக்கு ஏற்ப ''ஈரோஸ்'' இயக்கமும் தனது இராணுவ நிகழ்ச்சித் திட்டத்தை மாற்றியமைக்கத் தலைப்பட்டது. நூற்றுக்குநூறு விகிதம் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் எப்படியும் எமக்கே உரியன. எனவே, அவற்றின் மீது எமது முழுக் கவனத்தையும் செலுத்துவதை விட்டு, சர்ச்சைக்குரிய கிழக்கு மாகாணத்தின் மீது குறிப்பாகத் திருகோணமலை மீதும், இலங்கைத்தீவின் தெற்கிலுள்ள பெருந்தோட்டப் பிரதேசங்கள் மீதும் எமது கரிசனையைத் திருப்ப நாம் தீர்மானித்தோம்' என்கிறார் சங்கர்.

ஆகவே 'ஈரோஸ்' விடுதலை இயக்கத்தின் ஒழுங்கமைப்புக் குறிக்கோள் பிரதானமாகக் கிழக்கு, தெற்கு ஆகியவற்றின் மீது ஒருமுகப்படுத்தப்பட்டது. அதேவேளை இயக்க அல்லது தொழிற்பாட்டு, ரீதியான அதன் தற்போதைய குறிக்கோள்கள் இலங்கை அரசின் சொத்துகள் அரச மத்திய நிலையங்கள் முதலியவற்றை வேண்டுமென்றே நாசமாக்குதல், பொருளாதார

ஈற்பத்தொன்பது பேர் கொலையுண்டனர். 'இப்படி இறக்க நேரிட்ட அரச படையினருள் மிக அதிகமானோர் பாகிஸ்தானால் பயிற்றப்பட்டோராவர்.

1984 ஆம் ஆண்டு 'ஈரோஸ்' இன் இராணுவ நடவடிக்கைகள் இலங்கையின் தலைநகராம் கொழும்பு மாநகரில் ஆரம்பமாயின. திடீரெனப் பலமாகத் தாக்கும் 'ஈரோஸ்' விடுதலை இயக்கத்தின் ஆற்றலை நிதர்சனமாக எடுத்துக்காட்டும் நோக்கத்துடன் இவை முடுக்கி விடப்பட்டன. வேண்டுமென்றே, அதேசமயம், பொதுமக்கள் ஒருவராவது பலியாகாது இருக்கும் வண்ணமும் அவை நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் இரண்டு வெடிகுண்டுச் சம்பவங்கள் அடங்கும்: ஒன்று 1984ஆம் ஆண்டு ஜூன் இருபத்தெட்டாம் திகதி ஹொட்டேல் லங்கா ஒபரோயில் வெடித்தது; மற்றது லலித் அதுலத்முதலியின் 'இன்ஷூறன்ஸ்' அமைச்சு அலுவலகத்தில் ஒழித்துவைக்கப்பட்டு, வெடிக்குமுன்பே கண்டுபிடித்து அகற்றப்பட்டது. பின்னர் கடும்பிடியாளரான தேசிய பந்தோபஸ்து அமைச்சராகப் பதவிவகித்த அதுலத்முதலி, அவ்வேளை 'இன்ஷூறன்ஸ்' அமைச்சராக இருந்தார்.

உல்லாசப் பயணத் துறை வாயிலாக இலங்கை அரசிற்

'புரன்ட்லைன்' சஞ்சிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம்.

முக்கியத்துவம் வகிக்கும் உற்பத்தி இலக்குகளை இயக்கம் இழக்க வைத்தல் ஆகியவற்றோடு கிழக்கு இலங்கையில் 'கெரில்லா' யுத்தத்தைத் தீவிரப்படுத்துதலுமாம். இந்தப்போர் முறையானது காத்து மறைந்திருந்து தாக்குதல, நிலக்கண்ணி வெடியினுள் இராணுவத்தினரை அகப்படுத்துதல், அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளல் முதலாயின இந்தக் 'கெரில்லா' யுத்தத்தின் பல்வேறு வடிவங்களாகும்.

கிழக்கு இலங்கையில் 'ஈரோஸ்' ஈழம் புரட்சிகர அமைப்பின் செயலுபாயம் அரசபடையினரைப் போரில் இறங்கத் தூண்டுவதல்ல. அவ்வுபாயம் ஒரு புதிய உத்தியின் அடிப்படையில் அமையும். அதாவது இராணுவத்தினர் தமிழ்ப் பொது சனங்களைக் கொள்ளையடித்தும், கொன்றும் வெறியாட்டம் நடத்திய பின்னர் தமது பாசறைகளுக்கு மீள்கையில் அவர்களைத் தாக்கும் முறையைத் தேர்ந்தெடுத்தலாகும்.

இதுவரை, கிழக்குப் பிராந்தியத்தில் பதினொரு பாரிய தாக்குதல்களை அரச படையினருக்கு எதிராக 'ஈரோஸ்' நிறைவேற்றியுள்ளது. இவற்றுள் மிகப்பெரியது 1985, ஏப்பிரல் மாதம் மூன்றாம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தினுள் அமைந்த செங்கலடியில் உள்ள கொடுவாமடுவில் நேர்ந்தது. காத்து மறைந்திருந்து 'ஈரோஸ்' கட்டவிழ்த்துவிட்ட தாக்குதலில் ('ஸ்பெஷல் ராஸ்க் போர்ஸ்') விசேட படையினர்

குக் கிடைக்கக்கூடிய வருமானம், அத்துறையின் பாலுள்ள ஆர்வம் ஆகியவற்றைக் குறைத்தற்காகவும், தலைநகராகிய கொழும்பிலுள்ள அமெரிக்க ஐக்கிய அரசுகளின் தூதரகத்தில் புதிதாக இடம்பெறும் இஸ்ரேலிய அக்கறைகள் பிரிவு திறக்கப்படுதலுக்கு எதிராகவுமே முற்கூறப்பட்ட இந்த இரண்டு சம்பவங்களும் இடம் பெற்றன.

இவை தவிர, 1984 ஒக்டோபர் மாதம் இருபத்திரண்டாம் திகதயன்று கொழும்பு நகரின் பல்வேறு பாகங்களில் சமகாலத்தில் அநேக குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழலாயின. கொழும்பு கோட்டை புகைவண்டி நிலையம், அதற்கு அணித்தாகவுள்ள மத்திய பஸ் நிலையம், கொழும்பு வானொலி, தொலைக்காட்சி ('டெலிவிஷன்') மத்திய நிலையங்களுக்கு அருகிலுள்ள உள்ளூராட்சி அமைச்சு முதலாயின இந்த அசம்பாவிதங்களுட் சில. அவற்றைத் தொடர்ந்து கொழும்புத் துறைமுகத்திலிருந்து சபுகஸ்கந்த நில எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு இயற்கை நிலையிலுள்ள எண்ணெயைக் கொண்டு செல்லும் பெருங்குழாய்கள் வெடிகுண்டு 'விளாசல் களுக்கு இலக்காகின. இக்குண்டு வெடிப்புகளிற் பல, எதிர்பார்க்கப்பட்ட தாக்கம் விளைக்கவில்லைப் போலத் தோன்றியது.

எவ்வாறாயினும், 'ஈரோஸ்' விடுதலை இயக்கத்தின் இத்தாக்குதல் நடவடிக்கைகளுக்கு ஓர் இடையிட்ட தடை சம்ப

—5-ம் பக்கம் பார்க்க

## சின்னஞ்சிறு செய்திகள்

### இன்று திருவூஞ்சல்

கொக்குவில் மேற்குச் சித்தி விநாயகர் ஆலயம் 1975 ஆம் ஆண்டு புனருத்தாரணம் செய்யப் பெற்றுக் கும்பாபிஷேகம் நடாத்தப் பெற்றது. இவ்வாண்டு பிரம்மஸ்ரீ சதா-யோகீஸ்வரக்குருக்கள் தலைமையில் மகோற்சவம் 12 ம் திகதி கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகிச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இன்று மாலை ஏழு மணியளவில் திருவூஞ்சலும் நாளை சைவ இளைஞர் விழாவாக விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெறும்.

### போட்டிகள் நடைபெற்றன

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையேயான இசை, நடன, நாடகப் போட்டிகள் கடந்த புதன் கிழமை காலை புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

புங்குடுதீவு கொத்தணி அதிவர் திரு. ஆர். எஸ். செல்வத்துரை இப் போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

### அடிக்கடி மின் தடை

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் கடந்த ஒரு வாரகாலமாக மின் விநியோகம் அடிக்கடி தடைப்படுகிறது. இதனால் இப் பகுதியில் உள்ள வீடுகள், கடைகள் யாவும் இரவு வேளைகளில் இருளில் மூழ்க நேரிடுகிறது.

மண்ணெண்ணெய்க்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வரும் இவ்வேளையில் மின்விநியோகம் தடைப்படுவதால் பொது மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். மின்சார சபையினர் இதனைச் சீர்ப்படுத்த உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இங்குள்ள மக்கள் கோருகிறார்கள்.

---

### மலையகத்தை ..

...4 ஆம் பக்கத் தொடர்ச்சி

வித்தது. அதற்கு ஏதுவாக அமைந்தவை இரண்டு நிகழ்வுகள்: ஒன்று; 1985 ஜூன் மாதம் பதினெட்டாம் திகதி முதல் அமுலாகிய யுத்த இடைநிறுத்தம்; மற்றது, திம்பு பேச்சுவார்த்தைகள். இவ்விரு நிகழ்வுகளையும் இலங்கை அரசாங்கமானது தனது இராணுவ வளங்களைப் பலப்படுத்திக்கொள்ளப் பயன்படுத்தியது. அந்நாட்களில் நிலவிய நிலைமையைப் பார்த்தால், வட இலங்கையில் என்னதான் அசம்பாவிதங்கள் நேர்ந்தாலும், கொழும்பு தனது சாதாரண நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டுச் செல்லத் தயாராக இருந்தது போலத் தோன்றிற்று.

ஒருபுறம் கொழும்புத் தலைநகரிலும், மறுபுறம் இலங்கைத் தீவின் வடக்கு! கிழக்கிலும் நிகழ்ந்துவந்தகடும்அசம்பாவிதங்களைக் கண்ணுற்ற 'ஈரோஸ்' தமிழர் விடுதலை இயக்கத்தினர் மத்தியில் ஓர் உணர்வு தலைதூக்கியது. 'தீவின் வடக்கிலும், கிழக்கிலும், மூலைமுடுக்குகளெல்லாம் கோபாவேசத்துடன். "யுத்தம்" மூண்டெரிந்துகொண்டு இருக்கிறது. இருந்துமென்ன? கொழும்பு மாநகரிலோ இதன் தாககம் சிறிதேனும் அறவே உணரப் படுவதாக இல்லையே!"

(தொடரும்)

### இவ்வீதி திருத்தப்படும் நேரம் எப்போது?

(சுன்னாகம்)

சுன்னாகம் கந்தரோடை பிரதான வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாத காரணத்தால் வீதியின் இருமருங்கும் குடியிருக்கும் பொது மக்கள் மிகவும் பாதிப்பிற்குள்ளாகின்றனர். யாழ். மாவட்ட வீதிகளுள் இவ்வீதி தற்போது நூற்றுக்கணக்கான பார வாகனங்கள் பாவிக்கும் நிலை உருவாகியுள்ளதால் மக்களின் பாதிப்பும் மேலும் அதிகரித்துள்ளது.

சீமெந்துக் கூட்டுத்தாபன உபயோகத்திற்குத் தேவைப்படும் களிமண் முழுவதும் கந்தரோடை குளத்தில் அகழ்ந்து செல்லப்படும் போது ஒன்றரை அடி குழிகள் உண்டாகின்றன.

இவ்வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்கும்படி பெருந்தெருக்கள் திணைக்களத்தை பொது மக்கள் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றனர்.

### அப்படுகொலை வரலாற்றில் மாறு கறை

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்ட சமூக அபிவிருத்திக் கழகக் கூட்டத்தில் மண்டைதீவில் அரக்கத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்ட 34 கடற்றொழிலாளர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

கொலையுண்ட மீனவர் குடும்பங்களின் துயரில் யாழ் மாவட்ட சமூக அபிவிருத்திக் கழகமும் பங்கு கொண்டு ஆற்றொணாத் துயரத்தைத் தெரிவிப்பதாகக் கழகச் செயலாளர் திரு. வீ. இராஜதுரை குறிப்பிட்டார். தலைவர் திரு. மா. கந்தசாமி இப் படுகொலைகள் வரலாற்றில் ஒரு கறையாக அமையுமென்று கூறினார்.

### இடமாற்றம்

(வேலணை)

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் உதவி வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. எஸ். எஸ். இளைய தம்பி காரைநகர் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு உதவி வைத்திய அதிகாரியாக டாக்டர் ஏ வி. மயில்வாகனம் நியமனம் பெற்றுள்ளார்.

### கல்விக் கண்காட்சி

(கரவெட்டி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்விக் கண்காட்சியொன்று நடைபெற்றது. இக்கல்விக் கண்காட்சியில், உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி கண்காட்சியைத் தொடக்கி வைத்தார்.

தொடர்ந்து மாணவர்களும், பழைய மாணவர்களும், பெற்றோர்களும், உடுப்பிட்டி வட்டாரக் கல்விப் பொருட்காட்சித் தெரிவுக்குழுவும் பார்வையிட்டனர்.

வட்டாரக் கல்வித் தெரிவுக் குழுவினர் எதிர்வரும் புரட்டாதி மாதம் இரண்டாம் திகதி நடைபெறவிருக்கும் வட்டாரக் கல்விக் கண்காட்சிக்கு பல பொருட்களை தெரிவு செய்து, இன்றைய காலகட்டத்தில் பிள்ளைகளின் கல்வி மிக முக்கியமானதென்று தெரிவித்தனர்.

---

## பாரத - சீன

# எல்லைப்பிரச்சினை: சமரஸ பேச்சுக்கள் ஆரம்பமாகின

(பீக்கிங்)

எல்லைப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு ஒன்றினைக் காண்பதற்குப் பாரதமும், சீனவும் உறுதி பூண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வகையில் இருதரப்பினரும் பீக்கிங்கில் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்றனர்.

பாரதக் குழுவுக்கு வெளியுறவுச் செயலர் திரு ஏ. பி. வெங்கடேஸ்வரன் தலைமை தாங்குகிறார்.

எல்லைத் தகராறு தொடர்பாக இரு நாட்டு அதிகாரிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் ஏழாவது சுற்றுப் பேச்சுவார்த்தை இதுவாகும்.

இப் பேச்சு வார்த்தைகள் நல்ல பலனைத் தரும் என்று இருதரப்பு அதிகாரிகளும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன் பாரதத்தின் அருணசல் பிரதேசத்தில் சீனர் ஊடுருவல் செய்ததாகப் பாரதம் சீனவிடம் கடும்கண்டனம் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### மாநில நிலைமை: எம்.ஜி.ஆர் குராணு கலந்தாலோசனை

(சென்னை)

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குராணுவை ராஜ்பவனில் நேற்று முன்தினம் சந்தித்துச் சம்பாஷணை நடத்தினர்.

மாநில நிலைமை குறித்தும் மக்களின் அன்றாட வாழ்க்கை, வரட்சி நிவாரணம் என்பன பற்றி இருவரும் கருத்துப் பரிமாற்றம் செய்ததாகவும் இச் சந்திப்பு நாற்பத்தைந்து நிமிடங்கள் நீடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஆஸி. கப்பல்

(தூத்துக்குடி)

அவுஸ்திரேலியாவிலிருந்து பெருமளவு நிலக்கரியை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று தூத்துக்குடித் துறை முகத்துக்கு வந்துள்ளது.

இத் துறைமுகம் சமீபத்தில் விஸ்தரிக்கப்பட்டதாலேயே இக்கப்பல் இங்கு வரமுடிந்தது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### சைக்கிள் பேரணி

(சென்னை)

பெருந்தலைவர் காமராஜரின் 84 வது பிறந்தநாளையொட்டி ஐயாயிரம் சைக்கிள்கள் கலந்து கொண்ட பேரணி ஒன்று சென்னையில் நடத்தப்பட்டது.

### காங்கிரஸ் (ஜே) கட்சி இரண்டாக பிளவுபட்டது

(புதுடில்லி)

அமரர் ஜெகஜீவன் ராமை ஸ்தாபகராகக் கொண்டிருந்த காங்கிரஸ் (ஜே) பிளவுபட்டுவிட்டது.

அவர் இறந்து ஒருமாதம் பூர்த்தியாவதற்கு முன்னதாகவே கட்சிக்குள்போட்டிமனப் பான்மையுடன் கச்சைகட்டத் தொடங்கிவிட்டார்கள் அதன் ஏனைய தலைவர்கள் என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்திராணிதேவி தலைவர் பதவிக்கா முழுமூச்சுடன் செயற்படுகிறார். கட்சியின் தலைவராக திரு. பள்ளா தொடர்ந்தும் இருந்துவருகிறார்.

### நேபாளத்தில் மண்சரிவு 45 பேர் மடிவுஎனத் தகவல்

(காத்மண்டு)

நேபாளத்தில் மண்சரிவு ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் 45 பேர் மடிந்ததாகவும் வேறு சேதங்கள் உண்டானதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதுபற்றிய விபரங்களை உள்துறை மந்திரி பாராளுமன்றத்தில் வெளியிட்டார். கனத்த மழையின் விளைவே இம் மண்சரிவு என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

### ஜெயில்சிங் நேபாள விஜயம்

(காத்மண்டு)

பாரத ஜனாதிபதி திரு. ஜியானி ஜெயில்சிங் நேபாளத்தில் ஐந்துநாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அவர் நேபாள மன்னரையும், பிரதமர், வெளியுறவு மந்திரி ஆகியோரையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசவுள்ளார்: தொழில் மந்திரி திரு. டி. என். திவாரியும், திரு. ஜெயில்சிங்குடன் வந்துள்ளார்.

### 'ஒரே நாடு ஒரே மக்கள்'

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக் கட்சி "ஒரே நாடு, ஒரே மக்கள்" வாரம் அனுஷ்டிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

### அமெ. வெற்றி

(லண்டன்)

உலக கூடைப் பந்தாட்டப் போட்டியில் அமெரிக்கா வெற்றிபெற்றுள்ளது.


யாழ். தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையம்
(JAFFNA TELEPHONE EXCHANCE)
சீராகி இப்பொழுது செயற்படுகிறது !

ஆனல்
இன்றைய காலகட்டத்தில்
எது நிரந்தரம்? எது நிச்சயம்?

உள்நாட்டில், பிறநாட்டில் உள்ள உங்கள்
அன்பிற்குரியவர் ஆருடனே, பெருமதிப்பிற்குரிய பெரியோர்களுடனே
ரெலிபோன் பேசி ஆலோசித்து செயலாற்ற வேண்டி இருப்பின்

ரெலிகுளோப் மூலமாக
இன்றே ரெலிபோன் செய்க!
நாளை என்றது நிச்சயமற்றது!
உலகெங்கணும் உடனடியாக நீங்கள் ரெலிபோன் பேச
ஆறு ரெலிபோன் லைன்களை ஈடுபடுத்தி
அதி சிறந்த சேவை தருகிறது

ரெலிகுளோப்

ரெலிகுளோப் ரெலிபோன்: 25C88
B / 1425

ஈழமுரசு

## காமன்வெல்த் விளையாட்டை இலங்கையும் பகிஷ்கரிக்கும்

எடின்பரோவில் அடுத்த வியாழக்கிழமை நடைபெறவுள்ள காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கையும் கலந்துகொள்ள மாட்டாது என நேற்று மாலை வெளிவிவகார அமைச்சு அறிவித்தது. இதற்காக இன்று அங்கு செல்லவிருந்த ஏழு விளையாட்டு வீரரும் மூன்று அதிகாரிகளும் தமது பயணத்தை ரத்து செய்துள்ளனர். ஏற்கனவே அங்கு பயிற்சிக்காக சென்ற வேறு ஐந்து விளையாட்டு வீரர்கள் நாடு திரும்புமாறு பணிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை சைப்பிரஸ், பங்களாதேஷ் ஆகிய நாடுகளும் இதனை பகிஷ்கரிப்பதென முடிவு செய்துள்ளன.

வடமாகாண ஆசிரியர் சங்கம் அறிக்கை:

# வடக்கு கிழக்கை தமிழர் பாரம்பரிய பகுதியாக அரசு முதலில் ஏற்க வேண்டும்

"இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைக்கு முன் வைக்கப்படும் எந்த ஒரு சமாதானத் தீர்வும் வடக்கு கிழக்கு மாகாணங்களை தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசமாக ஏற்றுக் கொள்வதன் அடிப்படையிலேயே முன் வைக்கப்பட வேண்டும்"

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்க வடபிரதேசக் கிளையான வடமாகாண ஆசிரியர் சங்க செயற்குழுக் கூட்டத்தில் மாகாணசபை பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

தற்பொழுது ஜனதிபதியால் முன் வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள், மேற்கூறியவற்றை ஏற்கவில்லை என்பது வெளிப்படை. அதிகாரப் பரவலாக்கல் என தற்போது முன் வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் தமிழ் பேசும் மக்கள் எதிர் நோக்கியுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையாது.

சுதந்திரத்தின் பின் கடந்த 39 ஆண்டுகளாக மக்களின் உரிமைகள் பாராளுமன்றச் சட்டங்களாலும், அரசியல் யாப்புகளாலும் பதவிக்கு வந்த அனைத் அரசாங்கங்களினுலும் தொடர்ந்து பறிக்கப்பட்டு வந்துள்ளன.

இந்நாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தவறிய இவ் அரசாங்கங்கள் பொதுமக்களுக்கே எதிராக பல்வேறு அடக்குமுறை நடவடிக்கைகளை அமெரிக்க, மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளுடன் இணைந்து மேற்கொண்டு வந்துள்ளன.

இன்று இலங்கையின் முதலாழித்துவ இனவாத அரசாங்கம் இராணுவத்தின் உதவியுடன் அரச யந்திர ஒடுக்குமுறைக்கூடாக எதேச்சாதிகார முறையில் இலங்கையை ஆட்சி செய்து வருகிறது. ஆயுதப் படைகளின் உதவியுடன் ஆட்சியாளர்கள் வடக்கு கிழக்கில் உள்ள அப்பாவிக் குடிமக்களைத் தொடர்ச்சியாகக் கொன்று குவித்து வருகின்றனர்.

தற்போதுள்ள சூழ்நிலையில் இன்று முன் வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள், தீர்விற்கான குறைந்தளவு அடிப்படை அம்சங்களையேனும் உள்ளடக்கியதாய் இல்லையாதலால் நாம் இவ்வாலோசனைகளை நிராகரிக்கிறோம்.

## பூநகரியில் இரு கட்டடங்கள் குண்டு வைத்துத் தகர்ப்பு

(பூநகரி)

பூநகரி பரம்பன் நிராய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அலுவலகம் உட்பட இரு கட்டடங்களும் பெருந்தெருக்கள் திணைக்களத்திற்குச் சொந்தமான பாரிய கட்டடமொன்றும் இனந்தெரியாதவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

இக்குண்டு வெடிப்புச் சத்தங்களைப் பல மைல் தூரத்திற்கப்பாலிருந்தே கேட்கக்கூடியதாகவிருந்தது. இவ் இரு கட்டடங்களுக்கும் அருகாமையிலுள்ள மக்கள் பீதி காரணமாக வெளியேறியுள்ளார்கள்.

குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட பாடசாலையிலுள்ள சகல தளபாடங்களும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனுல் பாடசாலை நேற்று நடைபெறவில்லை.

### மன்னுரில்...

விக்கப்படவில்லை. இதனுல் நேற்று மன்னுர் பகுதியில் பதற்றம் காணப்பட்டது. போக்குவரவுகளும் நடைபெறவில்லை. அதேவேளை மட்டக்களப்பு கரடியனறு இராணுவ முகாமுக்கு அருகில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார், பலர் காயமடைந்தனர். இங்குள்ள ஐந்து வீடுகளும் எரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### கூட்டுத்தளபதி...

பரீட்சை விஞத்தாள்களை கொண்டு செல்ல ஏற்பட்டுள்ள போக்குவரத்து கஷ்டங்கள் பற்றி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இப்பரீட்சையை வடபகுதியில் எதுவித பிரச்சினைகளும் இன்றி நடாத்த சகலரும் ஒத்துழைக்குமாறு அவர் தெரிவித்தார்.


சேவ்டி ரவல் ஸ்தாபனத்தாரின்

## யாழ். / கொழும்பு பஸ் சேவை

எமது ஸ்தாபனத்தின் யாழ்/ கொழும்பு பஸ் சேவை வழமைபோல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை அறிவித்துக் கொள்ளுகிறோம்.

B/1427


தமிழாசிரியர் சங்கம்

## ஆசிரியர்கள் 25ம் திகதி பாடசாலை செல்லக்கூடாது

ஸ்ரீலங்கா அரசு ஈழமக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் இனப்படுகொலைகள் அண்மைய நாட்களில் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. இதற்கு எதிராக ஈழப்பொதுமக்கள் தமது ஒன்றிணைந்த வன்மையான எதிர்ப்பை ஸ்ரீலங்கா பேரினவாத அரசுக்கு காட்டவேண்டியது அவசியமும், அவசரமுமானது, இவ்வாறு கூறும் பிரசுரம் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினுல் வெளியிடப்பட்டுள்ளது. இனப்படுகொலைக்கெதிரான எதிர்ப்பு நாள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இப்பிரசுரத்தில் இம்மாதம் 25ம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலைக்கு செல்லாமலும், அதற்கான உத்தியோக பூர்வமான அறிவித்தல் எதையும் கொடுக்காதும் நிற்குமாறும், அன்றைய தினம் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறும் தமிழ் ஆசிரியர்களை இச்சங்கம் கோரியுள்ளது.

## ஆனைக்கோட்டை வீட்டில் துப்பாக்கி இளைஞர் கொள்ளை

யாழ்ப்பாணத்தில் இரவு நேரங்களில் ஆயுதம் தாங்கிய இனம் தெரியாத கோஷ்டிகளால் நடாத்தப் பட்டுவரும் கொள்ளைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

நேற்று முன்தினம் இரவு காக்கைதீவு பகுதியில் நல்லையா என்பவரது வீட்டில் சுமார் பதினைந்து பவுண் தாலி, சங்கிலிகள், அட்டியல், மோதிரம் ஆகியனவும் ரொக்கப்பணமும் துப்பாக்கி இளைஞர்களால் கொள்ளையடித்துச் செல்லப் பட்டுள்ளது. இச்சம்பவம் இரவு பதினெரு மணிக்கு இடம்பெற்றது.

துப்பாக்கி இளைஞர்கள் கோஷ்டி வீட்டிற்குள் நுழைந்து தாங்கள் இயக்கமொன்றைச் சேர்ந்தவர்களென்று கூறி, வீட்டில் போதை வஸ்துப் பொருட்கள் இருப்பதாகவும் அவற்றை சோதனை செய்வதற்காக வந்துள்ளோம் என கூறி கொள்ளையடித்தனராம்.

### ருக்கிங்...

கள் இன்று அறிக்கையொன்றை வெளியிடவுள்ளனர். ருக்கிங் என்ற போர்வையில் சில தீயசக்திகள் தம் பாலியல் வக்கிரங்களை தீர்த்துக்கொள்ள முயல்வதையும் இதன் மூலம் மாணவர்கள் உடலியல் உளவியல் ரீதியாக மிகமோசமாகப் பாதிக்கப்படுவதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ் அறிக்கையின் விபரம் நாளை வெளிவரும்.

### தொண்டமானுறு...

விடுதலைப் புலிகள் அப்பகுதிக் கண்காணிப்பினைப் பலப்படுத்தியதைத் தொடர்ந்து இராணுவத்தினர் அம் முயற்சியினையும் கைவிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இப் பாலம் செப்பனிடப்பட்டால் பலாலி, தொண்டமானுறு முகாம்களின் இராணுவத்தினர் வல்வெட்டித்துறை முகாமுக்கு நடபவனியை மேற்கொள்ள வசதியாக இருக்கும்.

### மட்டக்களப்புக்கு...

டங்கள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன்பின்னர் அமைச்சர்கள் ரெனி டி மெல், காமினி திஸ்ஸநாயக்காஆகியோருடன் குழுவினர் தனித்தனியாகப் பேசினர்.

ஜனுதிபதியுடன் இன்றும் பேச்சுவார்த்தை தொடரும்.

### சிவத்தம்பி...

பேராசிரியர் கா. சிவத்தம்பி நேற்று பதவியேற்றுர். இப்பதவியை வகித்த திரு. கா. விசுவலிங்கம் அவர்கள் அண்மையில் மரணமானதையடுத்து, பேராசிரியர் சிவத்தம்பி ஏகமனதாக இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டார்.

### இந்திய தூதரக...

பெறுகின்றது என்பதை நான் அனுபவ ரீதியாக உணர முடிந்தது'' என்று பூரி சற்றுக் கோபத்துடன் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் பூரி ஆஸ்பத்திரி வரமாட்டார் என்றும், சூடுபட்ட கணபதியை பலாலி விமான நிலையம் அனுப்புமாறு ஆஸ்பத்திரி அதிகாரிகளுக்கு ஒரு தகவல் அனுப்பப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதர், சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம் ஆகியோர் சகிதம் நேற்று நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு விஜயம் செய்ததுடன், யாழ். மாநகர ஆணையாளர் திரு. சிவஞானம், யாழ். ஆயர் அதி வண. தியோகுப்பிள்ளை, அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோரையும் சந்தித்துப் பேசினுர். சங்கிலியன் அகதிகள் முகாமுக்கும் சென்றதுடன், யாழ்நகரில் பாதிக்கப்பட்ட, எரியுண்ட சில கட்டங்களையும் பார்வையிட்ட பின்னர் கொழும்பு திரும்பினுர்.

### ஊழியர்...

ஊழியர்கள் மறுப்புதெரிவித்து வந்தனர். அதன்பின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உறுதி மொழியை நம்பி ஊழியர்கள் மீண்டும் கடமைக்கு சென்றதும், பின்னர் அங்கு நடந்த சம்பவங்கள் சிலவற்றை தொடர்ந்து கடந்த சிலதினங்களாக ஊழியர்கள் கடமைக்குச் செல்லாமலிருந்ததும் வாசகர்கள் அறிந்ததே.

## பாஸ்பெற புதுநடைமுறை

யாழ். குடாநாட்டில் இருந்து ஆனையிறவுக்கு அப்பால் லொறிகள் செல்வதற்கு ஏற்பட்டுள்ள பாஸ் பெறுவது தொடர்பாக வடபிராந்திய லொறி பஸ் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகள் நேற்று கோட்டை முகாமுக்கு அதிகாரிகளினுல் அழைக்கப்பட்டு பேச்சுக்கள் நடைபெற்றன.

லொறிகளுக்கு பாஸ் பெறுவதற்கு லொறிகளின் உரிமையாளர்கள் இனிமேல் இச்சங்க மூலமாகவே விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. எனவே இது பற்றிய விபரங்களுக்கு சங்க காரியாலயத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

## 22 சிங்களவர் மரணமாகினர்

கடந்த சனிக்கிழமை திருமலை — பொலநறுவ பகுதி எல்லைக் கிராமங்களான பேரவில, வடிகவேவ ஆகிய இடங்களில் இனம்தெரியாத சீருடையணிந்த நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானவர்களின் தொகை இருபத்திரண்டாக அதிகரித்துள்ளது.

## வர்த்தகர் கடத்தல்

யாழ். நவீன சந்தையிலுள்ள மணியம் டெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர் திரு. செ. சுப்பிரமணியம் இனம் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இவர் தாவடியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து நேற்று முன்தினமிரவு கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்தேவிக்கு மூன்று பஸ்கள்

யாழ். பஸ் நிலையத்திலிருந்து வவுனியாவுக்கு ரயில் பயணிகளின் நலன் கருதி தினமும் மூன்று பஸ் சேவைகளை ரயில் இணைப்பு சேவையாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை நடாத்திவருகின்றது. இதுதவிர மேலுமொரு பஸ் சேவை தினமும் அனுராதபுரத்திற்கு நடாத்தப்படுகின்றது இவ்வாறே வவுனியாவிலிருந்து யாழ். நகருக்கு ரயில் இணைப்பு பஸ் சேவைகள் தினமும் நடாத்தப்படுகின்றது.

### சூடுபட்ட...

கோட்டை இராணுவ முகாமிற்கு வந்தார். அங்கிருந்து யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. இராமநாதர் அவரை யாழ். வைத்திய சாலைக்கு அழைத்து வந்தார்.

வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எஸ். நச்சினுர்க்கினியரையும் திரு. பூரி சந்தித்தார்.

பிற்பகல் இரண்டு மணியளவில் வைத்தியசாலையிலிருந்து தமிழக மீனவர் கணபதியையும் அழைத்துக் கொண்டு திரு. பூரி கோட்டை இராணுவ முகாம்சென்று அங்கிருந்து ஹெலிகப்டர் மூலம் பலாலி சென்று விமான மூலமாக கொழும்பு சென்றுர்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 22-07-86 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22487